RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s36

OPEN ACCESS

# விலைமாதர்கள் வள்ளுவரிடம் கேட்ட வினாக்கள்

## கு. அனிதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா.

# Questions Asked to Valluvar by Harlots

## G. Anitha [a, *]

[a] Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: anithagunasekar313@gmail.com

Received: 02-04-2021
Revised: 07-04-2022
Accepted: 01-05-2022
Published: 27-05-2022

Check for updates

**ABSTRACT**

This article signifies how one group of women, who should be the epitome of discipline, virtues, and mothers of nobles in society, have transformed into harlots for the sake of poverty and emotional hunger in the physical body by hurting themselves. The sublime subject of this article is to reflect on the way the government itself supports this and approves the same as how the fertile lands are converted into commercial lands. The drying tears of the harlots who happen to sell their physical bodies but spread the ray of dignity without selling their hearts are the nourishment for this society to become fertile. Considering the changes brought about in our society by the Tamil movements created during the contemporary period, the distinct part of this article captures the similarity between the expressions of the inner turmoil of the harlots in the new collection of poems 'Vanakkam Valluva' by the Tamil scholar 'Erode Tamilanpan' and the current scenario with illustrations from early and contemporary literary works.

**Keywords:** Vanakkam Valluva, Harlots, Contemporary Period, Erode Tamilanpan,

## முன்னுரை

உலகம் யாவையும் தாமுளவாக்கியுள்ள, அமிழ்தினும் இனிய தேன்தமிழ் சொல்லெடுத்து, மானிட இனத்தின் சிந்தனை, உணர்ச்சிகள், மனவளர்ச்சி, இனவளர்ச்சி, வாழ்வியல் கோட்பாடுகளைத் தன்னகத்தே அடக்கியுள்ளவை, தமிழ் இலக்கியங்களாகும்.

மொழியின் இயங்குதளம் இலக்கியம். இவ்விலக்கியங்களின் நோக்கம், "கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை" யைப் போல அவ்வக்கால சமூக வாழ்வியல் நெறிகளையும், பண்பாடு, கலாச்சார நிலைகளையும் படைப்பாளரின் எண்ணப்படி பிரதிபலிப்பதே ஆகும்.

சங்ககால, இயற்கையோடு இயைந்த ஐந்திணை வாழ்வியலும், வீரயுக புறப்பாடல்களும், சங்கம் மருவிய கால அற இயக்கியங்களும் மறுமலர்ச்சிகால பக்தி இலக்கியங்களும், தற்கால இலக்கிய வகைகளான, புதினம், சிறுகதை, கவிதை கட்டுரைகள், உரைநடைகள், தத்துவ விடுதலையுணர்ச்சி படைப்புகள் அனைத்தும், சமூக வளர்ச்சியும் அவற்றில் கால, இட, இனத்திற்கேற்ப ஏற்பட்ட மாறுதல்களையும் சித்தரித்து இலங்குகின்றன.

சமுதாய மாற்றம் என்பது, மக்களின் வாழ்வியல் முறையில் ஏற்படும் நாகரிக, அறிவு, பண்பாடு, கலை பொருளாதார மாற்றங்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும், வீழ்ச்சியுமாகும். இந்த சமூக நிகழ்வுகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் சான்றாதார கருவூலங்களாகத் திகழ்வது, அவ்வக் காலங்களில் தோன்றிய இலக்கியங்கள் ஆகும்.

ஈரோடு தமிழன்பன் எனும் தமிழறிஞரின் புதுக்கவிதை வடிவத்தில் அமைந்துள்ள “வணக்கம் வள்ளுவ" என்ற தொகுப்பில் உள்ள “விலைமாதர்களின் உறையாடல்களின்" மையக்கருத்தை ஆய்வு செய்வதாகும். புதுமைப்பித்தன், தமிழ் சிறுதகையில் ஏற்படுத்திய “உருமாற்றம்" (Metamorphosis) போல, மரபுக் கவிதைகளில் உருமாற்றம் செய்து புதுக்கவிதை எனும் நவீன நடையில் வாதமுன்னுரைப்பு (Argument) அவதானிப்பு (Observation) குறிப்புரை (Comment) போன்ற முறைகளில் ஈரோடு தமிழன்பனின் இப்புதுக்கவிதைத் தொகுப்பு அமைந்துள்ளது.

விளைமாதர்கள், விலைமாதர்களான அவல நிலையும், விலைமாதர் என்ற நிலையிலிருந்தவர்கள் மனநிலையும் மீட்சிக்குத் தவிக்கும் கையறு நிலையும், இக்கால சமுதாயத்தில் கண்டுள்ள மாற்றங்களைப் பற்றிய முற்போக்கு சிந்தனையே இக்கட்டுரையின் மையப் பொருளாகும். இது சரியா, தவறா என்பது ஆய்வு அல்ல, எந்த ஒரு காரியத்தையும் வினையையும் மட்டும் ஆராயாமல் அதன் காரணத்தை ஆய்வதே சாலச் சிறந்தது.

## தமிழன்பனின் வாதம்

விலை மகளிர் பற்றியும் மாண்புறும் மனைவியர் பற்றியும் மிகச் சாதுர்யமாக, விலைமாதர்களின் துக்கத்தை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.

மானுட இனம் பெருக விளைநிலமான விலைமகளிர், ஊண்பெருக, உந்தி நிரப்பு, உணர்வு தணிக்கும் விலைமகளிரான, பரிணாம மாறுதல்கள், இச்சமுதாயத்தில் பெண்ணினத்தின் அவல நிலையையும், ஆணாதிக்க செறுக்கையும் பிரதிபலிப்பதாக இக்கவிதை அமைந்துள்ளது.

இந்த சமுதாயம், “மாயமகளிர்” என பெண்ணினத்தின் ஒரு சாராரை இழிவுபடுத்தி, கற்பென்னும் திண்மையை உடைத்து நொறுக்கி எக்காளச் சிரிப்புடனே (Tamilanban, 2014).

“மனைத்தக்க மாண்பு அற்றவர்கள்" என்ற முத்திரை பதித்து “மாயும் மகளிராக்கி" மருள வைத்து மகிழும் மட்டமான நிலையை படம்பிடித்து காட்டுகிறார் (Tamilanban, 2014).

விலைமாதர்கள், வேசிகள், பாலினத் தொழிலாளிகள், இரவுக் கன்னிகள், பண்பில் மகளிர், மாயமகளிர், வைப்பாட்டிகள், ஆசை நாயகிகள் என இக்காலத்தில் குறிக்கப்படும் பெண்ணினப் பகுதியினர், இக்காலத்திற்கு மட்டும் உரியோரல்லர். உலகில் மானுடம் தோன்றிய நாள் முதல், ஆண், பெண், என இருபாலர்கள் அவதரித்த நாள் முதல், பெண்கள், ஆண்களின் போகப்பொருளாகவும், ஆண்களின் இச்சைக்கும், உணர்ச்சிக்கும் ஆட்படுத்தப்பட்டு இனப்பெருக்க இயந்திரங்களாகவே உள்ளனர். காலப்போக்கில் பெண்களின் மதிப்பும் மரியாதையும், இல்லறத்துணை நிலைகளில் மாறுபாடு கண்டு பணம் பண்ணும் பதுமைகளாக இன்றைய கீழ்நிலையை அடைந்துள்ளது.

## சங்ககாலம் முதல் இன்றுவரை

சங்க இலக்கியங்களில் தலைமகன், தலைவி, ஐந்திணை வாழ்வியல் முறையை சித்தரிக்கும்போதும், பரத்தையர் என, ஒரு இனத்தைப் பற்றியும், பரத்தையரிடம் தலைமகன் செல்வதும் மீண்டும் தலைவியிடம் வருவதும் அன்றாட வாழ்வியல் அடிப்படையாகக் காட்டப்பட்டுள்ளது.

சான்றாக “குறுந்தொகை" எனும் தொகை நூலில் மருதத் தொகையில் தலைவன் பரத்தையர், தலைவி நிலைகளை கொச்சைப்படுத்தாமல், அன்றைய சமூக வாழ்வியல் நிலையைச் கூறிச் செல்கிறது (Puliyur Kesigan, 2015).

ஆடல் மகளிர் வீடே கதியெனக்கிடந்த தலைமகன், தலைவியிடம் திரும்பியதை மிக எளிதாக, விளையாட்டு இன்பமென உரைக்கும் பாடலில், பரத்தையரையும் பாங்குடன் பேணும் தன்மையை காண்கிறோம்

“தச்சன் செய்த சிறுமாவையும்

ஊர்ந்து இன்புறா அர் ஆயினும்

ஈர்ந்து இன்புறு உம் இளையோர் போல

உற்று இன்புறோம் ஆயினும்

நற்றேர்ப் பொய்கை ஊரண் கேண்மை

செய்வ இன்புற்றேனம் செறிந்தன வளையே"

தச்சன் செய்த மரக்குதிரையில் ஏறி இன்புற்று விளையாடும் சிறுவர்போல பரத்தையர், தலைவனிடம் இன்பம் காணட்டுமே என தலைவி மனத் தேறுதலோடு கூறும் பாடல், சங்க காலத்தில் பரத்தையர்க்கு இருந்த மேன்மையைக் காட்டுகிறது (Puliyur Kesigan, 2015).

தொல்காப்பியமும், பரத்தை வழி பிரிவு என்பதை தெளிவாக விளக்கியுள்ளது. சற்று காலமாறுதலுக்குப்பின், திருக்கோவில் பணிகளுக்காகவும் விழாக்கால ஆடல் பாடல் அணங்குகளாகவும், சில மகளிர் தாங்களாகவே முன்வந்து, இறைபணி ஆற்றி, இறைவனுக்கு அடிமையாக அற்பணித்துக் கொண்ட மகளிர் சமூகத்தை அடியார்கள் என்ற பின்னொட்டுடன் பரத்தையர் என்ற சொல் தேவரடியார்கள் என மாற்றம் பெற்றது.

சோழர்கால கல்வெட்டுகளும், தஞ்சை பெருவுடையார் கோவில் கல்வெட்டுகளிலும், தேவரடியார்களாக, அரசகுல மகளிர் முதல் சாதாரண குடிமகளிர்வரை பல இனத்ததவர்கள், மணம்புரிந்து கொள்ளாமலும் திருத்தொண்டாற்றியுள்ளனர்.

கால மாற்றத்தால், தேவரடியார்கள், தேவதாசிகள் என்று சொல்மாற்றம் பெற்றதோடல்லாமல், செயல்முறைகளிலும் மாறுபாடுகண்டு, கோவிலுக்கு நேர்ந்து விடப்பட்டு, பொட்டு கட்டப்பட்டாலும், செல்வந்தர்களால், தாசிகளாக, அடிமைகளாக நடத்தப்பட்டனர். அடியார்கள் அடிமைகளானார்கள்.

நாகரீக வளர்ச்சியும், சமூக ஏற்றத்தாழ்வுகள் கண்ட நிலையில், பொருள் சார்ந்த தேவைகளின் அதிகரிப்பால் தாசிகள், வேசிகளாயினர்.

## காரணம்

தற்கால புதினங்களில் மகளிர் மானம்விற்று பிழைக்கும் நிலைக்குக் காரணங்களாக, வறுமையும், பெற்றோர்களின் ஆடம்பர வாழ்வுக்காக தன் சொந்த மகளையே விலை பேசும் நிலையும், உடல் இச்சை, உணர்ச்சிகளை அடக்கமுடியாத ஆண், பெண் இருபாலரின் தவிப்புகளுமே காரணம் என்று இன்றைய சமுதாயத்தில் மகளிரின் உடல் விற்பனையை படம் பிடித்துக் காட்டியுள்ளனர்.

வறுமைக்கு சான்றாக, புதுமைப்பித்தனின் பொன்னகரம் சிறுகதையில் அம்மாளு என்ற பாத்திரம் வாயிலாக " கும்மிருட்டில் இருவரும் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள் ஆம், புருஷனுக்கு பால்கஞ்சி வார்க்கத்தான்

"என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே. இதுதான் ஐயா பொன்னகரம்" என்று அன்றைய பொன்னரகத்திற்குக் காரணம் வறுமை என்கிறார் (Puthumaipithan & Venkatachalapathy, 2015).

நா. பார்த்தசாரதியின் படைப்பான "பொன்விலங்கு" புதினத்தில் படைக்கப்பட்ட மோகினி" எனும் பெண்பாத்திரம், தன் தாயாரின் பேராசையால், பணத்தாசையால், தன்னால் ஜமீன்தாரின் வைப்பாட்டி நிலைக்குப் போகாமல் தன் குலத்தொழிலை வெறுத்து, சமுதாயத்தில் மரியாதையுடன் வாழ நினைக்க எவ்வாறு பாடுபடுகிறார் என்பதை படைப்பாசிரியரின் காலகட்டத்தில் நிகழ்ந்த சமுதாய சீர்கேட்டினை சித்தரித்துள்ளார் (Parthasarathy, 2012).

தமிழ் இலக்கிய காலகட்டத்தில் எழுபது எண்பதுகளில் ஜெயகாந்தன், சிவசங்கரி, லஷ்மி, தி. ஜானகிராமன் போன்ற சமுதாய சிந்தனையுள்ள படைப்பாளிகள், பெண்கள் பட்ட பாலுணர்வு துன்பங்களை, சேலையுரித்த நிகழ்வின் காரணங்களை தோலுரித்துக் காட்டியுள்ளனர். தி. ஜானகிராமனின் "மரப்பசு" படைப்பில் அம்மணியின் பாத்திரம் இருபாலரின் உணர்ச்சிப்பிழம்பின் உச்சநிலை, சமுதாய நிலை பிரதிபலிப்பாகும் (Janakiraman, 2008).

இவ்வாறாக, பரத்தையர், தேவரடியார்கள், தேவதாசிகள், ஆசைநாயகிகள் என்ற சொல்மாற்றம் அடைந்தாலும், பொருள் மாற்றமடையாமல், பொருளாதார சூழ்நிலையாலும், உணர்ச்சிகளின் கட்டுப்பாடின்மையாலும், சமகாலத்தில் பெண்கள் பணத்திற்காக துகிலுரித்த நிலையைக் கண்ட ஈரோடு தமிழன்பன், மனம் கலங்கி, விலைமாதர்களின் நிலைமைகளை தனது பாணியில் புதுக்கவிதையாக கண்ணீர் வடித்துள்ளார்.

விலைமாதர்களின் உள்ளக் குமுறல்களை வரிசைப்படுத்துகிறார் தமிழன்பன்.

"எங்கள் கிழக்கில் இருட்டுச் சூரியன். (விடியவே இல்லை)

உடம்பை "காயம் " என்பது எங்களுக்கே பொருந்தும்

காமுகர்கள் செய்யும் காயங்களால் ஆன காயம்"

எங்கள் தூக்கங்களும் துகிலுரியப்படுகின்றன.

புண்ணின் இரத்தத்தில் பூத்த பூக்கள் நாங்கள்

ஒவ்வொரு இதழிலும் மாறுவேடம் பூண்ட மரணம்

எங்கள் உடம்பின் எந்த ஓர் அங்குலத்திலும்

எங்கள் ஆன்மாவுக்கு இடம் இல்லை

விரக்தியின் உச்சமாக

"எந்த விலைமாது சதைவிற்று முதலாளி ஆனாள்

எந்த விலைமாது இரவுகளை விற்று கிழக்கை கிரையம்

செய்து கொண்டாள்

எந்த விலைமாது தன் மகளுக்கு குபேரன் வீட்டில்

சம்பந்தம் பேசினாள்.

"எல்லாம் விற்கிறோம். எனினும் இதயத்தை விற்பதில்லை" அதனால்தான் எங்கள் முயக்கம் பொய்மை முயக்கமே "என்று விலைமாதர்களின் உள்ளக் குமுறலை உலகுக்கு தமிழன்பன் உணர்த்தியுள்ளார் (Tamilanban, 2014).

தமிழ்தாசன் எனும் கவிஞன், வறுமைக்காக விலை போவதை, "நான் இருட்டில் பிணமாக மாறினால்தான் பகலில் அது பணமாக மாறும். பின்தான் என்குடும்பத்தின் பசியாறும்" என சித்தரிக்கிறார்.

பெண்படும் அவலமும், அவமானமும் கூறுமிடத்து, "என் மேனியில் உள்ள தழும்புகளைப் பார்த்தால் வரிக்குதிரைகள் கூட வருத்தம் தெரிவிக்கும்". "நிர்வாணமே என் நிரந்தர உடையானதால், சேலைகள் எதற்க்காக? என் காயங்கள் மறைக்கவே" என்ற வரிகள் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள பெண்களின் வலிகளை ஓலமிடுகின்றது. திருந்தி வாழ நினைத்தாலும் "மணிமேகலை என்பதை மறந்துவிட்டு (துறவி) மாதவியின் மகள் என்பதை மட்டுமே நினைவில் நிறுத்தும் சமுதாயம்.

## முடிவுரை

ஈரோடு தமிழன்பனின் புதுக்கவிதை. கவிஞனின் மனப்புலக் காட்சிகளை (Mental Landscapes) தோற்விப்பதாய் அமைந்துள்ளது. பாலியல் துன்பத்திற்கு ஆளாகும் ஒரு பாலினத்தின் மனப்பால் வலியை உணர்த்தும். இன்றைய சமுதாய சூழ்நிலையின் மாற்றத்தை மனவலியோடு விவரித்ததின் நோக்கம் அன்பின் விளைநிலம், அறத்தின் உறைவிடம். பண்பின் படைப்பிடம் சந்ததியின் விளைநிலமான மகளிர், இன்றைய சமுதாய சூழ்நிலையில் பயிர் விளைநிலங்களை, வயல்களை கூறுபோட்டு, கல்நட்டு விலைநிலங்களாக மாற்றியது போல, வறுமைக்காகவும், ஆடம்பரத்திற்க்காகவும்,

விளை நிலமான மாதர்களை, விலைமாதர்களாக கூறுபோடும் அவலநிலை மாறவேண்டும் என "வணக்கம் வள்ளுவ" எனும் இலக்கியத் துகள், சமூக இருளுக்கு திரியேற்றுகிறது. இவ்விளைமாதர்கள் விலைமாதர்கள் ஆனதற்கு காரணம் ஆராயப்பட்டு, வறுமையும், ஆடம்பர மோகமும் ஒருபக்கம் காரணமானாலும், காட்டாற்று வெள்ளம் போல அடக்கவொனா உணர்ச்சிக் கொந்தளிப்புகளே, இச்சமுதாய சீர்கேட்டிற்கு திறவுகோல் என்பது புலனாகிறது. சமுதாயத்தில் இன்னும் சிலர், சற்று திறமையும், அழகும் உடையோர் உடலை விற்காது. பல்லிளித்து பதவி பெருவதும், ஆண்மையைத் தூண்டி காரியத்தை சாதிக்கும் பெண்களும் தான் வேசியின் குணத்தை ஒத்துள்ளனர். ஆனால் வறுமையும், சூழ்நிலையின் உந்துதலாலும் விலைமாதராகும் பெண்ணை மட்டும் சமுதாயம் கீழ்த்தரமாக சித்திரிக்கிறது. மனிதகுலம் தோன்றியது முதல், இன்றைய சமுதாய நிலைவரை, வீட்டுக் குப்பையைக் கொட்ட ஒரு இடம் தேவைப்படுவதுபோல், உணர்ச்சிகளை கொட்ட தேவைப்படும் விலைமாது சமூகம் இருக்கத்தான் செய்யும் சாட்டையை சொடுக்கினாலும், சட்டங்கள் இயற்றினாலும், உடல் சட்டையை உரியும் தொழில் மறைவது, மேற்கே உதிக்கும் சூரியன் போன்றதே, உண்மையில் இவர்களும், கழுகுகள் எப்படி பிணம் தின்று காட்டை சுத்தம் செய்கிறதோ, அதுபோல சமுதாயத்தை சுத்தம் செய்யும் துப்புறவாளர்கள் என்றே கருதலாம். மனித இனம் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்காதவரை கடை திறப்பதை கட்டுப்படுத்த இயலாது. பெண்ணியம் காக்க மனக் கண்ணியம் வேண்டும் என்பதே சமுதாயம் உணரவேண்டிய கருத்து என இக்கட்டுரை வாயிலாக விழையப்படுகிறது.

## References


Janakiraman, T., (2008) Marappasu, Ainthinai Pathipagam, Chennai, India.

Parthasarathy, Na., (2012) Pon Vilangu, Sri Shenbaga Padhippagam, Chennai, India

Puliyur Kesigan, (2015) Kurunthogai - Moolamum Uraiyum, Gowra Puthaga Maiyam, India

Puthumaipithan, Venkatachalapathy A.R., (2015) Puthumaipithan Kathaikal Muzhuthokuppu, Kalachuvadu Publications Pvt. Ltd, Nagercoil, India

Tamilanban, (2014) Vanakkam Valluva, Poompuhar Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


## About the License:


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License